A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 50 / 2021**

திரு B. பழனி,
எண். 16/12, மூர்த்தி நகர்,
2வது தெரு, இளங்கோ நகர்,
பாடி, சென்னை – 50. ………மேல்முறையீட்டாளர்
(Rep by திரு மோகன் &
திரு B. பழனி)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ&ப/அம்பத்தூர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3வது மெயின் ரோடு, அம்பத்தூர் தொழிற்பேட்டை,
ஆம்பிட் IT பார்க் ரோடு,
தொழிற்பேட்டை காவல் நிலையம் எதிரில்,
அம்பத்தூர், சென்னை – 600 058.

2. உதவி செயற்பொறியாளர்/இ&ப/ ஜே.ஜே நகர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 KV SS வளாகம், 10வது பிளாக்,
ஜே.ஜே நகர்/கிழக்கு, சென்னை – 600 037.

3. உதவி பொறியாளர்/இ&ப/ ஜே.ஜே நகர்/வடக்கு,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். R-35, 120 feet முகப்பேர் ரோடு,
முகப்பேர், சென்னை – 600 037.

...... எதிர்மனுதாரர்கள்
(திருமதி. J. விஜயபார்வதி, செயற்பொறியாளர்/இ&ப/அம்பத்தூர்,
திரு T.R.கண்ணன், உதவி செயற்பொறியாளர்/இ&ப/ஜே.ஜே நகர்,
திரு L. சிவராமகிருஷ்ணன், உதவி மின் பொறியாளர்/இ&ப/ஜே.ஜே நகர்)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 23-06-2021</u>**

**<u>கேட்புரை நாள்: 08-12-2021</u>**

**<u>ஆணை நாள்: 31-03-2022</u>**

23.06.2021 அன்று பெறப்பட்ட திரு B. பழனி, எண். 16/12, மூர்த்தி நகர், 2வது தெரு, இளங்கோ நகர், பாடி, சென்னை – 50 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 50/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 08.12.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

தனது வீட்டிற்கு மின் இணைப்பு வழங்குமாறும், உரிய காலவரம்பிற்குள் மின் இணைப்பு வழங்காததால் இழப்பீடு வேண்டியும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளர் தனது வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி இணையதளம் மூலம் விண்ணப்பத்ததாகவும், demand noticeஇல் தெரிவித்திருந்த கட்டண தொகையை செலுத்தியதாகவும், தான் அளித்த விண்ணப்பத்திற்கு எந்த நடவடிக்கை இல்லாததால் உதவி பொறியாளர்/இ&ப/ஜே.ஜே நகர் அவர்களுக்கு தனது விண்ணப்பத்தின் தற்போதைய நிலை குறித்து விபரம் கேட்டு அதற்கு எந்த பதிலும் இல்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மேற்கண்ட விண்ணப்பத்தை உதவி பொறியாளர்/இ&ப/ஜே.ஜே.நகர்/வடக்கு அவர்களால் களஆய்வு செய்யப்பட்டு புதிய மின் இணைப்பு வழங்குவதற்கான எந்த சாத்தியகூறுகளும் இல்லை என மனுதாரரின் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாகவும் இத்தகவலை மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 மனுதாரர் கோரும் புதிய மின் இணைப்பு வழங்காததால் மின் இணைப்பு தருமாறு மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறைதீர்மன்றத்தை 05.11.2020 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சென்னை மின்பகிர்மான வட்டம்/மேற்கு 04.06.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>**

சென்னை மின் பகிர்மான வட்டம்/மேற்கு, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 04.06.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"**<u>மன்றத்தின் தீர்வு</u>**:

*One no. Service connection is already available and effecting of the additional service connection is not feasible of compliance as per Tamil Nadu Electricity Distribution Code as there is no permanent physical segregation. Hence, request of the petitioner to avail additional service connection is not feasible of compliance.”*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 22.09.2021 அன்று விசாரணைக்கு அட்டவணையிடபட்டு பின்னர் மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளுக்கு இணங்க 08.12.2021 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு B. பழனி மற்றும் திரு மோகன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி. J. விஜயபார்வதி, செயற்பொறியாளர்/இ&ப/அம்பத்தூர், திரு T.R.கண்ணன், உதவி செயற்பொறியாளர்/இ&ப/ஜே.ஜே.நகர் மற்றும் திரு L. சிவராமகிருஷ்ணன், உதவி மின் பொறியாளர்/இ&ப/ஜே.ஜே.நகர்/வடக்கு,

சென்னை மின்பகிர்மான வட்டம்/மேற்கு ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு கோரி 28.7.2020 இல் இணையதளம் மூலம் உரிய ஆவணங்களை சமர்ப்பித்ததாகவும், மின்சாரத்தை தான் பயன்படுத்த உத்தேசிக்கும் மின் உபகரணங்களின் விபரம்/Load details ஆகியவைகளை இணையதளத்தில் விண்ணப்பத்துடன் பதிவு செய்ததாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 கணினியின் ஆய்விற்கு பிறகு தனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதனுடைய Application Ref No.200090400720281 dated 28.7.2020 தனக்கு வழங்கப்பட்டு மின் இணைப்பிற்கு கட்டணம் செலுத்துமாறு (Demand notice) கேட்பு அறிவிப்பில் தெரிவித்திருந்த கட்டணம் ரூ.2818/- TANGEDCO வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு அதற்குரிய E-Receipt PGNINB26279041- dated 28-7-2020 time 13:32 பெறப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 தனது விண்ணப்பத்தின் மீது எந்தவித நடவடிக்கையும் இல்லாததால் Area "AE/JJN/O&M/North அவர்களுக்கு 11.8.2020-இல் பதிவு தபால் மூலம் தனது விண்ணப்பத்தின் தற்போதைய நிலை குறித்து விபரம் கேட்டதாகவும், அதற்கு பதில் இல்லை எனவும், தனது விண்ணப்பத்தின் மீது AE/JJN/North அவர்கள் TNERC Regulation படி கடமை செய்ய தவறியதால் தனக்கு ஏற்பட்ட பாதிப்பினையும் விதிமீறல்களையும் விரிவாக குறிப்பிட்டு EE/O&M/Amb.div." அவர்களுக்கு பதிவு தபால் மூலம் கடிதம் அனுப்பி தனக்கு மின் இணைப்பு வழங்க AE அவர்களுக்கு அறிவுறுத்துமாறு

கோரியதாகவும், தனது முறையீடு கவனிக்கப்படவில்லை என்பதால் இதுகுறித்து அனைத்து விபரங்களை தனது CGRF மனுவில் கூறப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 அந்த மனுவில் தனது மின் இணைப்பிற்குரிய அனைத்து விபரங்கள் தேதி வாரியாகவும், TNERC விதிகளின் நகல்களையும், சேவை குறைபாடுகளுக்குரிய இழப்பீடு தொகைக்கான கோரிக்கைகள் மற்றும் தீர்வுகள் குறித்தும், TANGEDCO வின் EE மற்றும் AE அவர்களின் அப்பட்டமான மோசமான விதிமீறல்கள் குறித்தும், தனது குறைகள் தீர்க்க CHAIRMAN CGRF west அவர்களுக்கு 5.11.2020 மனு செய்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

"Section 43 – Duty to supply on request

Electricity Act: 2003 and Central Act 36 of 2003 – eventhough consumer complied with statutory requirement on their part." தனது மனு (online application) TNERC– விதிகளின்படி Mandatory ஆவணங்களை கொடுத்து முறையாக விண்ணப்பிக்கப்பட்டதாகவும், தனது 5.11.2020 தேதியிட்ட மனுவிற்கு எந்த பதிலும் வராததால் 14.12.2020இல் தனது CGRF மனு எந்த நிலையில் உள்ளது என்ற விபரம் தெரிவிக்குமாறு பதிவு தபால் மூலம் கடிதம் அனுப்பியதாகவும், அதற்கு இதுநாள் வரை பதில் இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தான் மின் இணைப்பு கோரி online மூலம் 28.7.2020–இல் விண்ணப்பித்து அதற்கான demand notice பெறப்பட்டு 28.2.2020 அன்று பகல் 13.32 மணியளவில் TANGEDCO வங்கி கணக்கில் ரூ.2818/– வரவு வைக்கப்பட்டு E–Receipt பெறப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 TNERC–இன் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் தனக்கு மின் இணைப்பு வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டு (Agreement with TANGEDCO) முழு தொகையையும் தன்னிடமிருந்து TANGEDCO பெற்றுக்கொண்டுவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேற்கண்ட நிலையில் தனது மின் இணைப்பு தேவைகளுக்கு லஞ்சம் கொடுக்க மறுத்ததினால் தனது விண்ணப்ப மனு EE/O&M/Amb.AE/TJN/North அவர்களால் ரத்து செய்யப்பட்டு தான் மிகவும் பாதிப்பிற்குள்ளாகியதாகவும், Section 43

Electricity Act 2003, Central Act 36 of 2003 ல் Duty to supply on request என தனது official gazette–இல் கூறப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட அதிகாரிகள் அரசு உத்தரவை மீறி செயல்படுவதால் முறையிடுவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 தனது மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தில் அதில் தெரிவித்துள்ள statutory requirement – property tax receipt, வீட்டு மின் இணைப்பு வேலைகள், Meter and cutout தகுந்த இடம் ஒதுக்கப்பட்டு service connection பெற்றுக்கொள்ள தேவையான அனைத்தும் தயார் நிலையில் உள்ளதாகவும், இதுகுறித்து இதுநாள் வரை Licensee விதிமுறைப்படி மின் இணைப்பு பெறும் தகுதி நிலை தனக்கு உள்ளது, ஆனால் தனது Application Cancell செய்யப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 EE/O&M/Amb அவர்களின் கடிதத்தில் ஏற்கனவே தங்கள் வீட்டுக்கு ஒரு மின் இணைப்பு இருப்பதால் 2 வது மின் இணைப்பு விண்ணப்பம் Cancel செய்யப்படுகிறது என தனது அலுவலக கடித எண் EE/O&M/ABT/D.1225/20 dt. 14-9-2020-இல் தெரிவித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 மேற்கண்டவைகள் TNERC விதிகளில் (Supply code, Distribution Code) எதிலும் இதுபோன்ற விதிகள் இல்லை எனவும், ஒன்றுக்கு மேற்பட்ட மின் இணைப்புகள் வழங்கும் விதிகள் உள்ளதாகவும், EE/O&M/Amb அவர்களின் கடிதத்தில் ஒரே கதவு எண் கொண்டுள்ள இடத்தில் ஒரு நிறுவனத்திற்கு மேலோ அல்லது ஒரு நபருக்கு மேலோ மின் இணைப்பு வேண்டும் பட்சத்தில் நிரந்தர தடுப்பு (Permanent physical segregation) இருந்தால் மட்டுமே ஒரு இணைப்புக்கு மேல் வழங்க இயலும் என தெரிவித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 மேற்கண்ட விதி எண் 27(13), (14) 6 ஆண்டுகளுக்கு முன்பு omit செய்யப்பட்டு நடைமுறையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகவும், திருத்தம் செய்யப்பட்ட விதி எண் : Notification No.TNERC/18-19 dated 1-7-2014 தற்போது நடைமுறையில் உள்ளதாகவும், எனவே தமிழக அரசாணையை மூடி மறைத்து தவறான விவரங்கள் கூறி தனது மனுவை EE/O&M/Amb மற்றும் AE/JTN/North அவர்கள் முடக்கி வைத்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 TNERC Notification 8-19 திருத்தம் செய்யப்பட்ட விதியில் (Permanent Physical Electrical segregation) என்று கூறப்பட்டுள்ளதாகவும், தான் லஞ்சம் தர மறுத்ததால் மேற்கண்ட திருத்தம் செய்யப்பட்ட விதியை மூடி மறைத்து தனக்கு மின் இணைப்பு வழங்காமல் மேற்கண்ட TANGEDCO Area அதிகாரிகள் தண்டிக்க தக்க விதிமீறல்களில் ஈடுபட்டுள்ளதால் அதன் வகையில் தான் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சட்டபடியான தனது உரிமை மறுக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 600 சதுர அடி உள்ள தனது வீட்டுக்கு தாமதமின்றி மின் இணைப்பு வழங்க தாங்கள் Local licensee க்கு உத்தரவிட வேண்டும் எனவும், As per Commission Notification No.TNERC/SPR/1-8 dt. 3-12-2007 ன் இழப்பீடு கோருதல் விதி எண்: 33(3) ன்படி உரிய காலவரம்பிற்குள் முறையான தனது விண்ணப்பத்தின் படி மின் இணைப்பு வழங்காததால் நாள் ஒன்றுக்கு ரூ.1000/- என்ற வகையில் காலதாமத நாள் 98 நாள் 98 x 1000 = ஆக 98,000/- தனக்கு இழப்பீடு தகுந்த நடைமுறைப்படி வழங்க TANGEDCO விற்கு உத்திரவிடும்படி மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5.14 தனது முறையீடுகளுக்கு கடிதம் மூலம் உரிய காலத்தில் பதில் தராததால், நாள் ஒன்றுக்கு ரூ.250/- என கணக்கில் மொத்த நாள் 83 நாட்கள் = 83x250 = Rs.20,750 தனக்கு இழப்பீடு வழங்க TANGEDCO விற்கு உத்திரவிடும்படி மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 திரு.பழனி மனுதாரர் மின் இணைப்பு வேண்டி கடந்த 28.07.2020 அன்று online இல் விண்ணப்பித்தார் மற்றும் மின் இணைப்பிற்கான தொகை ரூபாய் 2818/- online மூலம் செலுத்தியதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 28.07.2020 அன்று அப்போதைய உதவி பொறியாளர்/இ&ப/ஜெ.ஜெ. நகர் வடக்கு அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டது எனவும், கள ஆய்வின் பொழுது புதிய மின் இணைப்பு வழங்குவதற்கான எந்த சாத்தியகூறுகளும் இல்லை (No Separate portion available) physical Segregation மற்றும் Electrical Segregation இல்லை என்று கண்டறியப்பட்டது எனவும், மேலும் விண்ணப்பதாரர் மின் இணைப்பு கோரிய பகுதி முதல்தள படிக்கட்டுடன் கூடிய சுமார் 6x4 அடி கொண்ட Head room பகுதியாகும். எனவே வாரிய விதியின்படி அவரது விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது எனவும், ரத்து

செய்யப்பட்ட தகவல் நேரில் மனுதாரரிடம் தெரிவிக்கப்பட்டு (Intimation Letter to the Consumer) கடிதம் நேரில் கொடுக்கும் பொழுது அவர் அதனை ஏற்கவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மனுதாரர் 10.8.2020 கடிதத்தின் மூலம் அவரது புதிய மின் இணைப்பிற்கான விண்ணபத்தின் தற்போதைய நிலையை தெரியப்படுத்த வேண்டுமாறு கூறினார் எனவும், மனுதாரர் மீண்டும் 31.8.2020 கடிதத்தின் மூலம் செயற் பொறியாளர்களுக்கு புகார் அளித்து ஆய்வு செய்யுமாறு மனுதாரர் தன்னிடம் தெரிவித்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அதன்படி மனுதாரரின் மின் இணைப்பு வேண்டிய இடத்திற்கு மறுகள ஆய்வு செய்வதற்காக உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஜெ ஜெ நகர் வடக்கு மேற்கொண்டதில் இரண்டாவது கூடுதல் மின் இணைப்பு வழங்க எந்த சாத்தியகூறும் இல்லை, No Separate Portion available என்று தெரிந்தது எனவும், மேலும் மனுதாரர் வீட்டில் ஏற்கனவே ஒரு முனை மின் இணைப்பு S/C No.040-009-446 உள்ளது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணைய விதியில் Distributions Code 27(13) மற்றும் 27(14) ல்

> *"27(13) ல் within a door (or) sub door number an establishment (or) person will not be given more than one service connection.*
>
> *27(14) ல் where more than one person or more than one establishment is or intended to be in occupation of a door number (or) sub door number more than one service connection will be given only if there is Permanent physical / Electrical segregation of area for which different services connection are applied for"* என்று TNERC விதியில் உள்ளது. அதன்படி மனுதாரர் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் ,தெரிவித்துள்ளார்.

6.6 மனுதாரரின் மின் இணைப்பு விண்ணப்பம் ரத்து செய்தபிறகு அவர் online மூலம் செலுத்தப்பட்ட தொகையை திரும்ப பெற்றுக்கொள்ள அவரிடம் Hand Receipt கையொப்பம் மற்றும் bank A/C cheque Xerox கேட்ட பொழுது அவர் அதனை தர மறுத்துவிட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் வழிகாட்டுதலின் படிதான் தமிழ்நாடு மின்சார வாரியம் இயங்கி வருகிறது. மேலும் எந்த விதிமீறலையும் பின்பற்றவில்லை எனவும், மனுதாரர் மேற்படி இந்த கோவிட் –19 காலத்தில் ஆள் பற்றாக்குறை இருக்கும் வேளையில் தங்களுக்கு மன உளைச்சல் ஏற்படுத்தும் நோக்கில் தங்கள் மீதும் தங்கள் வாரியத்தின் மீதும் எந்த வித முகாந்திரமும் இல்லாமல் பொய் குற்றசாட்டை கூறுவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேலும் வாரியத்திடமிருந்து சேவை இழப்பு தொகை பெறும் நோக்கில் எந்த வித முகாந்திரமும் இல்லாமல் மனுவில் குறிப்பிட்டுள்ளதாகவும், இது ஏற்புடையதாக இல்லை எனவும், மனுதாரரின் மனுவை தள்தள்ளுபடி செய்து நடவடிக்கை எடுக்குமாறும் எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**7.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

7.1 மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களின் வாதங்களை கருத்தில் கொண்டால் மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு கூடுதலாக ஒரு தாழ்வழுத்த மின்இணைப்பு தரவேண்டும் என்ற கோரிக்கை ஏற்புடையதானா என்பதாகும்.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் EE/O&M/Amb அவர்களின் கடிதத்தில் ஏற்கனவே தங்கள் வீட்டுக்கு ஒரு மின் இணைப்பு இருப்பதால் 2 வது மின் இணைப்பு விண்ணப்பம் Cancel செய்யப்படுகிறது என அலுவலக கடித எண் EE/O&M/ABT/D.1225/20 dt.14-9-2020ன்படி தெரிவித்துள்ளதாகவும், TNERC விதிகளில் (Supply code, Distribution Code) எதிலும் இதுபோன்ற விதிகள் இல்லை எனவும், ஒன்றுக்கு மேற்பட்ட மின் இணைப்புகள் வழங்கும் விதிகள் உள்ளதாகவும், EE/O&M/Amb அவர்களின் கடிதத்தில் ஒரே கதவு எண் கொண்டுள்ள இடத்தில் ஒரு நிறுவனத்திற்கு மேலோ அல்லது ஒரு நபருக்கு மேலோ மின் இணைப்பு வேண்டும் பட்சத்தில் நிரந்தர தடுப்பு (Permanent physical segregation) இருந்தால் மட்டுமே ஒரு இணைப்புக்கு மேல் வழங்க இயலும் என தெரிவித்துள்ளதாகவும், மேற்கண்ட விதி எண் 27(13), (14) 6 ஆண்டுகளுக்கு முன்பு omit செய்யப்பட்டு நடைமுறையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகவும், திருத்தம் செய்யப்பட்ட விதி எண் : Notification No.TNERC/18-19 dated 1-7-2014 தற்போது நடைமுறையில் உள்ளதாகவும், எனவே தமிழக அரசாணையை மூடி மறைத்து தவறான விவரங்கள் கூறி தனது மனுவை EE/O&M/Amb

மற்றும் AE/JTN/North அவர்கள் முடக்கி வைத்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மேலும் 600 சதுர அடி உள்ள தனது வீட்டுக்கு தாமதமின்றி மின் இணைப்பு வழங்க உத்தரவிட வேண்டும் எனவும், விதி எண்: 33(3) ன்படி உரிய காலவரம்பிற்குள் முறையான தனது விண்ணப்பத்தின் படி மின் இணைப்பு வழங்காததால் நாள் ஒன்றுக்கு ரூ.1000/– என்ற வகையில் 98 நாள் காலதாமதத்திற்கு ரூ.98,000/– தனக்கு இழப்பீடு தகுந்த நடைமுறைப்படி வழங்க TANGEDCO விற்கு உத்திரவிடும்படியும், தனது முறையீடுகளுக்கு கடிதம் மூலம் உரிய காலத்தில் பதில் தராததால், நாள் ஒன்றுக்கு ரூ.250/– என கணக்கிட்டு மொத்தம் 83 நாட்களுக்கு Rs.20,750 இழப்பீடு வழங்கவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் மேல்முறையிட்டாளர் மின் இணைப்பு வேண்டி கடந்த 28.07.2020 அன்று online இல் விண்ணப்பித்து மின் இணைப்பிற்கான தொகை ரூபாய் 2818/– online மூலம் செலுத்தியதாகவும், 28.07.2020 அன்று அப்போதைய உதவி பொறியாளர்/இ&ப/ஜெ.ஜெ. நகர் வடக்கு அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டது எனவும், கள ஆய்வின் பொழுது புதிய மின் இணைப்பு வழங்குவதற்கான எந்த சாத்தியகூறுகளும் இல்லை (No Separate portion available, physical Segregation மற்றும் Electrical Segregation) என்று கண்டறியப்பட்டது எனவும், மின் இணைப்பு கோரிய பகுதி முதல்தள படிக்கட்டுடன் கூடிய சுமார் 6x4 அடி கொண்ட Head room பகுதியாகும் என தெரிவித்துள்ளார். எனவே வாரிய விதியின்படி அவரது விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது எனவும், ரத்து செய்யப்பட்ட தகவல் நேரில் மனுதாரரிடம் தெரிவிக்கப்பட்டதாகவும், அதற்கான கடிதம் நேரில் கொடுக்கும் பொழுது அவர் அதனை ஏற்கவில்லை எனவும், மனுதாரர் வீட்டில் ஏற்கனவே ஒரு முனை மின் இணைப்பு உள்ளது S/C No.040–009–446 எனவும் தெரிவித்துள்ளார்.

7.5 தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணைய விதியில் Distributions Code 27(13) மற்றும் 27(14) ல் குறித்துரைத்தவாறு Permanent physical / Electrical segregation *இல்லாததால்* மனுதாரர் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாகவும், மின் இணைப்பு விண்ணப்பம் ரத்து செய்தபிறகு அவர் online மூலம் செலுத்தப்பட்ட தொகையை திரும்ப பெற்றுக்கொள்ள அவரிடம் Hand Receipt கையொப்பம் மற்றும் bank A/C cheque Xerox கேட்ட பொழுது அவர் அதனை தர மறுத்துவிட்டதாகவும் எதிர்மனுதாரர்

**தெரிவித்துள்ளார். தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் வழிகாட்டுதலின் படிதான் தமிழ்நாடு மின்சார வாரியம் இயங்கி வருகிறது எனவும், எந்த விதிமீறலையும் பின்பற்றவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.**

**7.6** எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்பகிர்மான விதி எண்.27ஐ குறிப்பிட்டுள்ளதால், அதுபற்றி அறிய தற்பொழுது நடைமுறையில் உள்ள தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 14, 15 மற்றும் (15A) –ஐ ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*27. Requisitions for Supply of Energy:*

*(14) Where more than one person or more than one establishment is or intended to be in occupation of a door number or sub door number, more than one service connection will be given only if there is a permanent physical/ electrical segregation of areas for which different service connections are applied for.*

*(15) In case of flat system and shopping complexes where more than one flat or shops are located with permanent physical segregation, more than one service shall be given.*

*(15A) Notwithstanding anything contained in sub-regulations (14) and (15), a person or an establishment or an entity shall be given only one service connection in a premises or in contiguous premises to run a business or service or occupation or another form of activity including its associated activities and for activities of the associates even if there is a permanent physical segregation.*

**7.7** மேற்கண்ட விதி 27(14) ன் படி ஒரு கதவிலக்கத்தின் அல்லது துணைக்கதவிலக்கத்தில், ஒன்றுக்கும் மேற்பட்ட நபரோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனமோ குடியிருக்கும் பொழுது அல்லது குடியிருக்க முற்பட்டாலோ பல மின்னிணைப்புகளுக்கு விண்ணப்பித்த நேர்வுகளில் அவை நிரந்தரமாக புறநிலை தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் தனித்தனி மின்பிரிவுகள் இருப்பின், ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புகள் தரப்படும் என்றும்,

விதி 27(15)ன்படி அடுக்குமாடி வீடுகளையும் வணிக வளாகங்களையும் பொருத்தவரையில், ஒன்றுக்கும் மேற்பட்ட அடுக்ககங்களோ கடைகளோ வெளிப்படையாக நிரந்தரமாகப் பிரித்துவைக்கப்பட்டிருந்தால் ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புகள் தரப்படும் என்றும்,

மற்றும் விதி 27 (15A) ன் படி (14) மற்றும் (15) ஆம் ஒழுங்குமுறைவிதிகளில் எப்படி இருந்தபோதிலும், ஒரு நபர் அல்லது நிறுவனம் அல்லது தனித்தன்மையான நிறுவனம் ஆகியவற்றிற்கு ஒரு வளாகத்தில் அல்லது சேர்ந்திருக்கும் வளாகங்களில், அவை நிரந்தரமாக புறநிலை தனிமைப்பட்ட இடங்களாக இருந்தாலும், ஒரு தொழிலுக்கோ அல்லது சேவைக்கோ அல்லது பணிக்கோ அல்லது

அதன் ஐக்கிய பணி நடவடிக்கைகள் உட்பட வேறுவிதமான அமைப்பில் இருக்கும் நடவடிக்கைகளுக்கோ, மற்றும் சார்ந்தவர்களின் பணிகளுக்கோ, ஒரே ஒரு மின்னிணைப்பு மட்டுமே தரப்படும் என்றும் அறியமுடிகிறது.

7.8 இவ்வழக்கில் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான அம்சம் விதி 27(14) ன் படி ஒரு கதவிலக்கம் அல்லது துணைக்கதவிலக்கத்தில், அவை நிரந்தரமாக புறநிலை தனிமைப்படுத்தப்பட்ட இடங்களாகவும் மற்றும் தனித்தனி மின்பிரிவுகளாக இருப்பின் (permanent physical / electrical segregation of areas), ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புகள் தரப்படும் என்பதாகும். **கள ஆய்வின் பொழுது புதிய மின் இணைப்பு வழங்குவதற்காக மேல்முறையிட்டாளர் கூடுதலாக ஒரு புதிய மின்னிணைப்பு வேண்டி விண்ணப்பித்த வளாகம்** நிரந்தரமாக புறநிலை தனிமைப்படுத்தப்பட்ட இடங்களாகவும் மற்றும் தனித்தனி மின்பிரிவுகளாகவும் **இல்லையெனவும், மின் இணைப்பு கோரிய பகுதி முதல்தள படிக்கட்டுடன் கூடிய சுமார் 6x4 அடி கொண்ட Head room பகுதி எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேல்முறையிட்டாளரும் அதை மறுக்கவில்லை, மேலும் அவருடைய மகனுக்கு திருமணம் செய்ய இருப்பதால் கூடுதலாக ஒரு புதிய மின்னிணைப்பு தேவைப்படுவதாக வாதுரையின்போது தெரிவித்தார். ஆனால், மேல்முறையிட்டாளருக்கு கூடுதலாக ஒரு புதிய மின்னிணைப்பு வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள்** தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 14, 15 மற்றும் (15A) –ன்படி **இல்லையென நான் கருதுகிறேன்**.

7.9 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் **மேல்முறையிட்டாளர் கூடுதலாக ஒரு புதிய மின் இணைப்பு வழங்குவதற்காக விண்ணப்பித்த வளாகம்** நிரந்தரமாக புறநிலை தனிமைப்படுத்தப்பட்ட இடங்களாகவும் மற்றும் தனித்தனி மின்பிரிவுகளாகவும் **இல்லையெனவும், மின் இணைப்பு கோரிய பகுதி முதல்தள படிக்கட்டுடன் கூடிய சுமார் 6x4 அடி கொண்ட Head room பகுதி எனவும் அறியப்பட்டுள்ளது. எனவே,** தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 14, 15 மற்றும் (15A) –ன்படி **மேல்முறையிட்டாளர் கூடுதலாக ஒரு புதிய மின்னிணைப்பு வழங்குமாறு கோருவது ஏற்புடையதாக இல்லையென** தீர்வு செய்யப்படுகிறது.

7.10 **மேலும் மேல்முறையிட்டாளர் உரிய காலவரம்பிற்குள் தனது விண்ணப்பத்தின் படி மின் இணைப்பு வழங்காததால் நாள் ஒன்றுக்கு ரூ.1000/- என்ற வகையில் 98 நாள் காலதாமதத்திற்கு ரூ.98000/- இழப்பீடு வழங்க உத்திரவிடும்படியும், தனது முறையீடுகளுக்கு கடிதம் மூலம் உரிய காலத்தில் பதில் தராததால், நாள் ஒன்றுக்கு**

ரூ.250/- என கணக்கிட்டு மொத்தம் 83 நாட்களுக்கு Rs.20,750 இழப்பீடு வழங்கவும் கேட்டுக் கொண்டுள்ளார். பத்தி 7.9-இல் தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 14, 15 மற்றும் (15A) –ன்படி மேல்முறையிட்டாளர் கூடுதலாக ஒரு புதிய மின்னிணைப்பு வழங்குமாறு கோருவது ஏற்புடையதாக இல்லையென தீர்வு செய்யப்பட்டள்ளதால் மின்னிணைப்பிற்குரிய அவரது இழப்பீடு கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. ஆனால் தனது முறையீடுகளுக்கு கடிதம் மூலம் உரிய காலத்தில் பதில் தராததால், நாள் ஒன்றுக்கு ரூ.250/- என கணக்கிட்டு மொத்தம் 83 நாட்களுக்கு Rs.20,750 இழப்பீடு வழங்க மேல்முறையிட்டாளர் கோருவதால், இது குறித்து தமிழ்நாடு மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் விதிகளுக்கான ஒழுங்குமுறைவிதிகள் 17ஐ ஆராய விரும்புகிறேன்.

> ***"17. Responding to Consumer's Complaint –***
>
> *If any consumer makes a complaint in writing to the Territorial Engineer of the concerned licensee then, the Territorial Engineer concerned shall reply to the consumer within ten days after receipt of the letter. In case the Territorial Engineer requires to visit the site or consult any other officer to give a comprehensive reply, the Territorial Engineer shall explain to the consumer as to why a substantive response cannot be sent immediately and intimate the name, address and telephone number of the Officer dealing with the complaint. The Territorial Engineer shall also ensure that a substantive response is sent to the consumer within twenty days of receiving the complaint letter".*

7.11 மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதித்தொகுப்பின் விதி 17ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, நுகர்வோர் எவரும் சம்பந்தப்பட்ட பகுதி பொறியாளருக்கு எழுத்து வடிவில் முறையீடு செய்தால் அந்த சம்பந்தப்பட்ட பொறியாளர் கடிதத்தை பெற்ற 10 நாட்களுக்குள் பதில் அனுப்ப வேண்டும். பகுதிப் பொறியாளர் இடத்தினை பார்வையிட அல்லது பிற அலுவலரிடம் கலந்து ஆலோசனை செய்ய விரும்பும் நேர்வில் நுகர்வோருக்கு ஏன் பதில் அனுப்ப முடியவில்லை என்பதை விளக்க வேண்டும். மற்றும் அந்த முறையீட்டை கையாளும் அலுவலரின் பெயர், முகவரி, தொலைபேசி, எண் ஆகியவற்றை தெரிவிக்கவேண்டும். பகுதிப்பொறியாளர், முறையீட்டு கடிதம் பெற்ற இருபது நாட்களுக்குள் நுகர்வோருக்கு போதிய பதிலுரை அனுப்பப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

7.12 மேல்முறையீட்டாளர் தனது கோரிக்கை சம்பந்தமாக 10.08.2020 அன்று உதவி மின் பொறியாளர்/விநியோகம்/J.J.நகர்/வடக்கு அவர்களிடம் முறையீடு செய்துள்ளார். அந்த முறையீட்டில் உள்ள கோரிக்கை சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையும் இல்லாததால் 05.11.2020 மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு மனுசெய்து இழப்பீடு கோரியுள்ளார். ஒழுங்குமுறை விதி 17–ன்படி மேல்முறையீட்டாளருக்கு சம்பந்தப்பட்ட உதவி பொறியாளர் 10 நாட்களுக்குள் உரிய பதில்

அளித்திருக்க வேண்டும் அல்லது மனுவிற்கான பதிலை அவர் கள ஆய்வு செய்து அல்லது வேறு அலுவலரின் ஆலோசனையை பெற்று பதில் தரப்படவேண்டும் எனில் 20 நாட்களுக்குள் பதில் அனுப்பியிருக்க வேண்டும். இந்த வழக்கில் 10.08.2020 அன்று மனு செய்த பின்பு பதில் **வழங்கப்படவில்லை.**

7.13 விதிக்கப்படுகிற செயல்திறனை உரிமைதாரர் அடையாவிட்டால் பாதிக்கப்பட்ட நுகர்வோர், உரிமைதாரரிடமிருந்து சட்டத்தில் விதிக்கப்பட்ட ஈட்டுத்தொகையை பெற தகுதியுடையவர் ஆகின்றார். ஈட்டுத்தொகையை பற்றித் தெரிந்துகொள்ள தமிழ்நாடு மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் விதிகளுக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் விதி 21(6) ஆராய வேண்டும். அந்த விதித்தொகுப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *“21. Compensation: The Licensee is expected to achieve the performance prescribed. If a Licensee fails to meet the standards specified for various service areas, the affected consumer is entitled for compensation by the Licensees as stipulated in the Act. 1 [The compensation payable is set out in the table below, namely:-*

| S.No. | Events | Compensation payable |
|---|---|---|
| 1 | xxxx xxxxx xxxx xxxxx | xxxx xxxxx xxxx xxxxx |
| 2 | xxxx xxxxx xxxx xxxxx | xxxx xxxxx xxxx xxxxx |
| 3 | xxxx xxxxx xxxx xxxxx | xxxx xxxxx xxxx xxxxx |
| 4 | xxxx xxxxx xxxx xxxxx | xxxx xxxxx xxxx xxxxx |
| 5 | xxxx xxxxx xxxx xxxxx | xxxx xxxxx xxxx xxxxx |
| 6 | Responding to consumer’s complaints | Rs.25/- for each day of delay subject to a maximum of Rs.250/- |
| 7 | xxxx xxxxx xxxx xxxxx | xxxx xxxxx xxxx xxxxx |

7.14 மேற்கண்ட விதி 21(6)ன் படி நுகர்வோரின் முறையீடுகளுக்கு பதில் தராமல் இருந்தால் ஒவ்வொரு நாள் தாமதத்திற்கும் ரூ.25/– வீதம் பெருமமாக ரூ.250/– வரை ஈட்டுத்தொகை வழங்கலாம் என்று உள்ளது. மேல்முறையீட்டாளரின் 10.08.2020 நாளிட்ட முறையீட்டிற்கு பதில் **தரப்படாததால்** மேல்முறையீட்டாளர் பெருமமாக ரூ.250/– வரை ஈட்டுத்தொகை பெற தகுதியுள்ளவர் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>**

8.1 பத்தி 7.0 உள்ள தீர்வுகளின்படி **மேல்முறையிட்டாளர் கூடுதலாக ஒரு புதிய மின் இணைப்பு வழங்குவதற்காக விண்ணப்பித்த வளாகம்** நிரந்தரமாக புறநிலை தனிமைப்படுத்தப்பட்ட இடங்களாகவும் மற்றும் தனித்தனி மின்பிரிவுகளாகவும் **இல்லையெனவும், மின் இணைப்பு கோரிய பகுதி முதல்தள படிக்கட்டுடன் கூடிய சுமார் 6x4 அடி கொண்ட Head room பகுதி எனவும் அறியப்பட்டுள்ளது. எனவே,** தமிழ்நாடு மின்பகிர்மான

விதித்தொகுப்பின் விதி 14, 15 மற்றும் (15A) –ன்படி **மேல்முறையிட்டாளர் கூடுதலாக ஒரு புதிய மின்னிணைப்பு வழங்குமாறு கோருவது ஏற்புடையதாக இல்லையென** முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேல்முறையீட்டாளரின் 10.08.2020 நாளிட்ட முறையீட்டிற்கு பதில் **தரப்படாததால்** மேல்முறையீட்டாளர் பெருமமாக ரூ.250/– வரை ஈட்டுத்தொகை பெற தகுதியுள்ளவர் என்று தீர்வு செய்யப்படுகிறது. மேற்கண்ட ஈட்டுத்தொகையை அவருக்கு காசோலையாக வழங்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

8.3 மேற்கண்ட தீர்வுகளை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை எதிர்மனுதாரர் இந்த தீர்வு கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவு இடப்படுகிறது.

8.4 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 50/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:
1. திரு B. பழனி,
எண். 16/12, மூர்த்தி நகர்,
2வது தெரு, இளங்கோ நகர்,
பாடி, சென்னை – 50.

2. செயற்பொறியாளர்/இ&ப/அம்பத்தூர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3வது மெயின் ரோடு, அம்பத்தூர் தொழிற்பேட்டை,
ஆம்பிட் IT பார்க் ரோடு,
தொழிற்பேட்டை காவல் நிலையம் எதிரில்,
அம்பத்தூர், சென்னை – 600 058.

3. உதவி செயற்பொறியாளர்/இ&ப/ ஜே.ஜே நகர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 KV SS வளாகம், 10வது பிளாக்,
ஜே.ஜே நகர்/கிழக்கு, சென்னை – 600 037.

4. உதவி பொறியாளர்/இ&ப/ ஜே.ஜே நகர்/வடக்கு,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். R-35, 120 feet முகப்பேர் ரோடு,
முகப்பேர், சென்னை - 600 037.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
சென்னை மின் பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33 KV, திருமங்கலம் வளாகம்,
அண்ணா நகர், சென்னை – 600 040.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.